Exemption under Land Ceiling Act

* 326 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether the Committee set up to consiler the exemption granted in the Land Ceiling Act as submitted its report; and

(a) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) குழு தன் இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

(இ) கூட்டுக்குழுவின் பரிந்துரைகளின்பேரில் தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உரிமைக்கு வரம்பு கட்டுதல்) திருத்த மசோதா 1971 கொண்டுவரப்பட்டு இருக்கிறது.

MR. SPEAKER: This has been discussed very elaborately on several occasions during the Land Revenue Demand. Hence, I am not allowing any supplementaries.

Cumbly Weaving Centre in Hosur Block.

* 327 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to start a Co-operative Cumbly Weaving Centre in Hosur Block, Dharmapuri District; and

(b) if so, when it will be started?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) ஆம்.

(இ) இக்கூட்டுறவுச் சங்கத்தை நிறுவுவதற்கான செயற்குறிப்பு தொழில் வணிகத்துறையினரின் பரிசீலனையிலுள்ளது. இச்சங்கம் அமைத்தால் நன்கு செயல்படுமா என்பதை ஆராய்ந்த பின் அதைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் இயக்குநரால் எடுக்கப்படும்.

சென்னையிலுள்ள தொழில் கூட்டுறவு வங்கி

* 328. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் இயங்கி வரும் தொழில் கூட்டுறவு வங்கி (Industrial Co-operative Bank) லாபத்தில் இயங்கி வருகிறதா?

(இ) ஆம் எனில், 1970-ஆம் ஆண்டு முடிய அதன் லாபம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) ஆம்.

(இ) 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதி முடிய லாபம் ரூ. 3,04,622.47.